செய்தி வெளியீடு எண் – 901 – நாள்: 18.10.2021

செய்தி வெளியீடு

**மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சித்துறை திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் ஊரக வளர்ச்சித்துறையின் பணிகள் மேம்பாடு குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகத்தில் இன்று ஆய்வு நடத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அரசினால் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு ஊரக வளர்ச்சித்துறை அறிவிப்புகளை செயல்படுத்துதல், அதன் தற்போதைய நிலை, பணிகளின் முன்னேற்றம் மற்றும் நிதிநிலை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வினை மேற்கொண்டார். ஆய்வுக் கூட்டத்தில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் ஊரக வளர்ச்சித்துறையினால் எடுக்கப்பட்ட, எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகள் மற்றும் முன்னேற்ற நிலை, அரசின் வீடுகள் வழங்கும் திட்டத்தின் பயனாளிகள் தேர்வு, வீடுகட்டும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் மற்றும் விரைந்து முடிப்பதற்கான வழிமுறைகள், சமத்துவபுரம் பணிகள், ஊரக சாலைகள் மேம்பாடு, ஜல்ஜீவன் திட்டத்தில் குடிநீர் இணைப்பு வழங்குவதில் முன்னேற்ற விவரம், தூய்மை பாரத இயக்கப்பணிகள் போன்றவற்றை ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் தேசிய அளவில் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்துவதில் தமிழ்நாடு எப்போதும் முதன்மை மாநிலமாகத் திகழும் வகையில் பணிகளை குறித்த காலத்தில் முடித்து சிறப்பான சேவையினை வழங்குவதில் துறை அலுவலர்கள் திட்டமிட்டு, சிறப்புடன் செயல்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களின் சிறப்பான வழிகாட்டுதலின்படி ஊரக வளர்ச்சித்துறை சார்ந்த அனைத்து அறிவிப்புகளையும் உடனடியாக முழுவீச்சில் செயல்படுத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர் இ.ஆ.ப., அவர்களும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கூடுதல் இயக்குநர்கள் மற்றும் முதன்மைப் பொறியாளர்களும் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.